உ

கடவுள் துணை.

# ருது நூல்



பிரசுரித்தவர் :

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர்தெரு,
காபிரைட்] சென்னை-1 [பைசா 60

உ
கடவுள் துணை

# ருது நூல்

## மாத பலாபலன்

சித்திரைமாதம்-புருஷனுக்காகாது
வைகாகி-சுகமாயிருப்பாள்
ஆனி-புத்திர சம்பத்தாயிருப்பாள்
ஆடி-பல புருஷரை யிச்சிப்பாள்
ஆவணி-நல்ல குழந்தைகளைப் பெறுவாள்
புரட்டாசி-விருத்தி புத்தியுடையவள்
ஐப்பசி-புந்திரருண்டாகி விதவையாவாள்
கார்த்திகை-பலரையுந் தூஷிப்பாள்
மார்கழி- நல்ல குழந்தைகளைப் பெறுவாள்
தை-புண்ணியஞ் செய்பவளாயிருப்பாள்
மாசி-திரவியமுண்டாயிருப்பாள்
பங்குனி-வெகு குழந்தைகளைப் பெறுவாள்

## வார பலாபலன்

ஞாயிறு-மிக வியாதியாயிருப்பாள்
திங்கள்-பதிவிரதையா யிருப்பாள்
செவ்வாய்-இடுக்கமுண்டா யிருப்பாள்
புதன்-புத்திரரும் பொருளுமுண்டா யிருப்பாள்
வியாழன்-பாக்கியவதியா யிருப்பாள்
வெள்ளி-பதிபக்தி யுண்டாயிருப்பாள்
சனி-விபத்தையடையாள்

## திதி பலாபலன்

பிரதமை-பாவியாயிருப்பாள்
துதியை-பாக்கியவதியா யிருப்பாள்
திரிதியை-குழந்தைகளைப் பெறுவாள்
சதுர்த்தி-பல புருஷரை யிச்சிப்பாள்
பஞ்சமி-நன்மையை யடைவாள்
சஷ்டி-சண்டைக்காரியா யிருப்பாள்
சப்தமி-புத்திரபாக்கிய முண்டாயிருப்பாள்
அஷ்டமி-இராட்சசியா யிருப்பாள்

நவமி-கிலேசமாயிருப்பாள்
தசமி-புத்திர பாக்யமுண்டாயிருப்பாள்
ஏகாதசி-சுசிகரமா யிருப்பாள்
துவாதசி-பலரையுந் தூஷிப்பாள்
திரயோதசி-நல்ல தேஜசு உண்டாயிருப்பாள்
சதுர்த்தசி-சோரம் போவாள்
பௌர்ணமி-அசல் வீடு திரிவாள்
அமாவாசை-தரித்திரமா யிருப்பாள்

நக்ஷத்திர பலாபலன்

அசுவணி-சுபகரமாயிருப்பாள்
பரணி-அசல் வீடு திரிவாள்
கிருத்திகை-மிக தரித்திரமாயிருப்பாள்
ரோகணி-புத்திர சம்பத்தாயிருப்பாள்
மிருகசீரிடம்-சுசிகரமா யிருப்பாள்
திருவாதிரை-நிற்பாக்கியமாயிருப்பாள்
புனர்பூசம்-பதிவிரதையா யிருப்பாள்
பூசம்-பதிபக்ஷமுண்டா யிருப்பாள்
ஆயிலியம்-கபடியா யிருப்பாள்
மகம்-புத்திர நாசமடைவாள்
பூரம்-கர்ப்ப நஷ்டமடைவாள்
உத்திரம்-தனதானிய முண்டாயிருப்பாள்
அஸ்தம்-பந்துக்களை ரட்சிப்பாள்
சித்திரை-பதிவிரதையா யிருப்பாள்
சுவாதி-வெகு பிள்ளைகளைப் பெறுவாள்
விசாகம்-அழுக்கடைந்திருப்பாள்
அனுஷம்-பதிக்கு நேசமாயிருப்பாள்
கேட்டை-சிறையாயிருப்பாள்
மூலம்-புத்திருண்டா யிருப்பாள்
பூராடம்-விசனமாயிருப்பாள்
உத்திராடம்-சம்பத்துடனே யிருப்பாள்
திருவோணம்-பாக்கியமுண்டா யிருப்பாள்
அவிட்டம்-பிள்ளைகளுண்டா யிருப்பாள்
சதயம்-பூர்ணயுசாயிருப்பாள்
பூரட்டாதி-நோய்புருஷனை யுடையவளாயிருப்பாள்

உத்திரட்டாதி-தரித்திரியாயிருப்பாள்
ரேவதி-சகல சம்பத்துண்டா யிருப்பாள்

### யோக பலாபலன்

விஷ்கம்பம்-விசனமுண்டாயிருப்பாள்
பிரீதி-சந்தோஷமுண்டாயிருப்பாள்
ஆயுஷ்மான்-தீர்க்காயுசாயிருப்பாள்
சௌபாக்கியம்-சம்பத்துண்டாயிருப்பாள்
சோபனம்-மங்களமா யிருப் ாள்
அதிகண்டம்-பாவியாயிருப்பாள்
சுகாமம்-சுகமாயிருப்பாள்
திரிதி-தைரியமுண்டா யிருப்பாள்
சூலம்-துர்மரணமாவாள்
கண்டம்-பாவியாயிருப்பாள்
விக்குதி-நன்மையுண்டா யிருப்பாள்
துருவம்-பதிவிரதையா யிருப்பாள்
வியாகதம்-விதவையாவாள்
அரிஷணம்-யோக்கியமாயிருப்பாள்
வச்சிரம்-நல்ல ரூபவதியாயிருப்பாள்
சக்தி-சகல சம்பத்துண்டாயிருப்பாள்
வதபாதம்-கொடிய விசனமாயிருப்பாள்
வரியான்-தர்மசிந்தையாயிருப்பாள்
பரீகம்-உறவுக்குப் பகையாயிருப்பாள்
சிவம்-நல்லவளாயிருப்பாள்
சித்தம்-திரவியமுண்டாயிருப்பாள்
சாத்தியம்-போக பாக்கியமுண்டாயிருப்பாள்
சுபம்-சந்தோஷமுண்டாயிருப்பாள்
சிப்பிரம்-கீர்த்தியுண்டாயிருப்பாள்
பிரமம்-பாவியாயிருப்பாள்
மாகேந்திரம்-வியாதியால் மரணமாவாள்
வைதிகிருதி-உயிர்வதை செய்வாள்

### கரண பலாபலன்

பவம்-சுகமுண்டாயிருப்பாள்
பாலவம்-சௌபாக்கியவதியாயிருப்பாள்
கௌலவம்-ரூபவதியாயிருப்பாள்

தைதுலை-பட்சமுண்டாயிருப்பாள்
கரசி-விதவையாவாள்
வணிசி-கொள்ளக் கொடுக்க வல்லவள்
பத்திரை-நன்மையா யிருப்பாள்
சகுனி-நடவா நடக்கை நடப்பாள்
சதுஷ்பாதம்-சந்தோஷமில்லாதவள்
நாவகம்-நன்மையில்லாதவள்
கிமஸ்துக்கினம்-தரித்திரமா யிருப்பாள்

இலக்கன பலாபலன்

மேஷம்-தரித்திரமாயிருப்பாள்
ரிஷபம்-சொற்ப புத்திரருண்டா யிருப்பாள்
மிதுனம்-பதிபக்ஷமுண்டா யிருப்பாள்
கடகம்-வெகுபுத்திரருண்டா யிருப்பாள்
சிங்கம்-புருடனை நீக்கியிருப்பாள்
கன்னி-பதிவிரதையாயிருப்பாள்
துலாம்-தனசம்பத்துண்டாயிருப்பாள்
விருச்சிகம்-விபசாரியாயிருப்பாள்
தனுசு-உத்தம மத்திபமாயிருப்பாள்
மகரம்-மானமில்லாதவளா யிருப்பாள்
கும்பம்-திரவிய முண்டா யிருப்பாள்
மீனம்-புத்திரருண்டா யிருப்பாள்

இலக்கின ஸ்தான பலன்

மேஷம்-வீட்டிற்கு வெளியில்
ரிஷபம்-பசுத் தொழுவத்தில்
மிதுனம்-நிர்வாணமா யிருக்கையில்
கடகம்-தண்ணீர்க் கரையில்
சிங்கம்-வீட்டிற்கு வெளியில்
கன்னி-வன மத்தியில்
துலாம்-கிராம மத்தியில்
விருச்சிகம்-அசல் வீட்டில்
தனுசு-தன் வீட்டில்
மகரம்-தண்ணீர்க் கரையில்
கும்பம்-ஜலக் கரையில்
மீனம்-தீர்க் கரையில்

### ஸ்தான பலன்

வீட்டுக்கு வெளியில்-விபசாரி
பசுத்தொழுவமாகில்-பதிவிரதை
நிர்வாணமாகில்-கிலேசம்
தண்ணீர்க் கரையாகில்-ஆயுளுண்டு
வனமத்தியிலாகில்-சம்பத்துண்டு
கிராம மத்தியிலாகில்-வியாபாரியாவாள்
அயல் வீடாகில்-கெட்ட நடத்தை
வீட்டுக்குள்ளாகில்-ஒழுக்கமுடையவள்
கோயிலாகில்-மிகவுஞ் சாமர்த்தியம்
ஸ்திரீ மத்தியிலாகில்-சுகமாயிருப்பாள்
படுக்கையிலாகில்-தகப்பனை யிழப்பாள்
நிற்கையிலாகில்-நன்றாய் வாழ்வாள்
புசிக்கையிலாகில்-வெகுநன்மையுண்டு
குதிரைமேலாகில்-வெகு திரவியமுண்டு
கொல்லையிலாகில்-காணியாட்சியுண்டு

### ஏழாமிடப் பலன்

சூரியன்-விதவையாவாள்
சந்திரன்-குழந்தைகளை யிழப்பாள்
செவ்வாய்-வேசையாவாள்
புதன்-மலடியாவாள்
குரு-பாக்கியமில்லாதவளா யிருப்பாள்
சுக்கிரன்-வீடுவிட்டுப் போவாள்
சனி-வியாதியாயிருப்பாள்
இராகு-புருஷனை யிழப்பாள்
கேது-உறவுக்குப் பகையாயிருப்பாள்

### ஒரு ஸ்திரீ ருதுவான நக்ஷத்திரத்தில் நவக்கிரகங்களிருக்கில் அவைகளின் பலாபலன்

சூரியனிருக்கில்-புருஷன் மரிப்பான்
சந்திரனிருக்கில்-காஷாயி
செவ்வாயிருக்கில்-இறந்துபோவாள்
புதனிருக்கில்-மலடாவாள்
குருவிருக்கில்-நோன்புடையவள்

சுக்கிரனிருக்கில்-மலடி
சனியிருக்கில்-வேசை
இராகிருக்கில்-விபசாரி
கேதிருக்கில்-துறவி

உத்தம பலன்

சுபக் கிரகங்களுடைய அஷ்டவர்க்கங்களிலே ருது வானாலும், ருதுவான லக்கினத்துக்கும் கேந்திரம் திரிகோணம் 2-மிடம் 11-மிடம் சுபக் கிரகங்களிருந்தாலும் 6-மிடம் பாபக் கிரகங்களிருந்தாலும் உத்தமமெனப்படுமென்பதாம்.

அதம பலன்

யாதொரு உபத்திரத்தில் கிரண காலத்தில் சங்கிராந்தியில் பாபக் கிராந்தத்தில் திரியஸ்தமுரிதில் 7-மிடம் பாபக்கிரக மிருக்கும்போது குரு நட்சத்திரங்களில் சூரியன் சஞ்சரிக்கின்ற லக்கினத்தில் புருஷனுக்குச் சந்திராஷ்டமான காலத்தில் ஸ்திரீ ருதுவானால் தோஷமெனப்படும்.

தரிசன பலாபலன்

தானே பார்க்கில்-துக்கமுண்டு
கன்னியாஸ்திரீ கண்டால்-புண்ணியமுண்டு
கைம்பெண் கண்டால்-விதவை
வியாதிஸ்தர் கண்டால்-நோய்
வேசி கண்டால்-போகபாக்கியம்
மங்கிலியஸ்திரீ கண்டால்-சுமங்கலம்
எண்ணெய்த் தலையர் காணில்-தரித்திரம்

நாழிகை பலாபலன்

10-நாழிகையுளாகில்-உத்தமம்
20-நாழிகையுளாகில்-மத்திமம்
30-நாழிகையுளாகில்-அதமம்

கால பலாபலன்

பிராதக் காலமானல்-சுபம்
முற்பகலானல்-தீர்த்தயாத்திரை
மத்தியானமானல்-புத்திர சம்பத்துண்டு

பிற்பகலானல்-சோரத்வம்
சாயுங்காலமானல்-வெகு பிள்ளைகளுண்டு
அஸ்தமனமானல்-வேசையாவாள்
முன்னிராத்ரியானல்-தீர்க்காயுளுண்டு
நடுராத்ரியானல்-விதவையாவாள்
பின்ராத்திரியானல்-சுகமில்லாதவள்
சந்திகளானல்-பாக்கியமற்றவள்

மேற்படி ஸ்தனக் குறிப்பு

சாயுங்காலமானல்-சூப்பிளுப்போலிருக்கும்
அர்த்தராத்திரியானல்-இரண்டுஞ் சுருங்கிப்போம்

ஜாம பலா பலன்

1-வது ஜாமமானல் சுபகரமாயிருப்பாள்
2-வது ஜாமமானல் மங்கிலியமுண்டாயிருப்பாள்
3-வது ஜாமமானல் திரவிய்முண்டாயிருப்பாள்
4-வது ஜாமமானல் பலரையும் வேண்டுவாள்

ஜாம ஸ்தானக் குறிப்பு

1-வது ஜாமம் ஏந்துங் கொங்கையுண்டு
2-வது ஜாமம் குந்துங் கொங்கையுண்டு
3-வது ஜாமம் சாய்ந்த கொங்கையுண்டு
4-வது ஜாமம் சரிந்த கொங்கையுண்டு.

ருதி ஸ்திரீ வஸ்திரக் குறிப்பு

நகைத்தால்-சிவப்புப் புடவை
கோபமானல்-வெள்ளைப் புடவை
நாணமானல்-கறுப்புப் புடவை

மேற்படி விந்து பலாபலன்

வட்டமானல்-பொருள் சேரும்
சதுரமானல் சத்துரு நாசம்
பிறைபோலானல்-ஆயுசு குன்றும்
நீண்டிருந்தால்-மரணம்
வண்டுபோலிருந்தால்-திரவியமுண்டு
செண்டுபோலிருந்தால்-பிள்ளைகளுண்டு

### தோஷ பலாபலன்

1-வது நாழிகையானல் புருஷனுக்காகாது
2-வது நாழிகையானல் திரவிய நாசம்
3-வது நாழிகையானல் சகல நாசம்
4-வது நாழிகையானல் தரித்திரமாயிருப்பாள்

### க்ஷத்திரிய குணம்

அசுவனி-ரோகணி-மிருகசீரிடம்-பூசம்-உத்திரம்-அஸ்தம்-சித்திரை-சுவாதி - விசாகம் - அனுடம்-மூலம்-திருவோணம்-அவிட்டம்-சத்யம்-உத்திரட்டாதி-ரேவதி இப்பதினறும் உத்தமம். மகம் - திருவாதிரை - கிருத்திகை-கேட்டை-புனர்பூசம் இவ்வைந்தும் மத்திபம். மற்றவை அதமமென்பதாம்.

### மேற்படி மாத பலாபலன்

புருட நக்ஷத்திரத்தில் பெண்ஜாதி ருதுவானலும். கார்த்திகை-திருவாதிரை - புனர்பூசம்-மகம் - கேட்டை இந்த நக்ஷத்திர பாதம் 4-க்குள் 1-வது பாதத்தில் ஸ்திரீ ருதுவானல் சுபம். 2-வது பாதத்திலானல் 52 பேருக்கு அன்னங் கொடுக்கவும், 3-வது பாதத்திலானல் பரிகாரஞ் செய்யவும். 4-வது பாதத்திலானல் ஓமசாந்தி செய்யவும். பரணி, பூசம், பூராடம்-பூரட்டாதி-ஆயிலியம் இந்த நக்ஷத்திர பாதம் 4-க்கு 1-வது பாதத்தில் ஸ்திரீ ருதுவானல் விதவை, 2-வது பாதத்தில் புத்திரஹானி, ?-வதுபாதத்தில் நலமிராது, 4வது பாதத்தில் சுபமில்லை. இதற்கு ஏழு நாளைக்குமேல் சடங்கு செய்விக்கவும்.

### நிஷேத கால அளவு

பரணியில் ருதுவானல் 10-மாதம், பூராடம் 8 மாதம் மகம் 12 மாதம், திருவாதிரை-பூரம் 6மாதம், ஆயிலியம் கார்த்திகை. கேட்டை 4 மாதம், உத்திரம் 6 மாதத்துக்குமேல் ருதுவான ஸ்திரீயைப் புருடன் பார்ககத் தோஷமில்லை யென்பதாம்.

### ஆருட பலாபலன்

கிழக்கு-செல்வமுண்டா யிருப்பாள்
தென்கிழக்கு-மலடி
தெற்கு-நன்மை
தென்மேற்கு-பிக்ஷையெடுப்பாள்
மேற்கு-யோகியாவாள்
வடமேற்கு-விதவை
வடக்கு-ரூபவதி
வடகிழக்கு வேசை

### வஸ்திராருடம்

கிழக்கு-கிழிந்த புடவை
தென்கிழக்கு-பச்சைப் புடவை
தெற்கு-சிவப்புப் புடவை
தென்மேற்கு-வெள்ளைப் புடவை
வடமேற்கு-கறுப்புப் புடவை
வடக்கு-பஞ்சவர்ணப் புடவை
வடகிழக்கு-மஞ்சட்சரிகை புடவையுள்ளவள்

### மேற்படி பலாபலன்

கிழிந்த புடவையானால்-கலகம்
பச்சையானால்-தரித்திரம்
சிவப்பானால்-வியாதி
வெள்ளையானால்-சந்தானம்
அழுக்கானால்-நன்மை
கருப்பானால்-விபசாரம்
பஞ்சவர்ணமானால்-தரித்திரம்

### பிந்தாருடம்

கிழக்கு 3 துளி கண்டிருக்கும்
தென்கிழக்கு 3 துளி
தெற்கு 4 துளி
தென்மேற்கு 2 துளி
மேற்கு 4 துளி
வடமேற்கு 5 துளி
வடக்கு 4 துளி
வடகிழக்கு 4 துளி கண்டிருக்கும்

### மேற்படி பலாபலன்

ஒற்றையானுல் ஆண் குழந்தைகள்
இரட்டையானுல் பெண் குழந்தைகள்

### புத்திராருடம்

கிழக்கு 7 பிள்ளைகள்
தென்கிழக்கு 1 பிள்ளை
தெற்கு 8 பிள்ளைகள்
தென்மேற்கு 4 பிள்ளைகள்
மேற்கு 6 பிள்ளைகள்
வடமேற்கு 2 பிள்ளைகள்
வடக்கு 9 பிள்ளைகள்
வடகிழக்கு 10 பிள்ளைகள்

### மேற்படி பலாபலன்

ஒற்றையானுல் சம்பத்துண்டு
இரட்டையானுல் ரோகமுண்டு

### ருது பிரச்சனை பலாபலன்

பிரசன்னை கேட்க வந்தபோது எத்தனை நாழிகையோ அத்தனை நாழிகையில் 3 தள்ளி மற்றவையோடு அன்றைய திதி வாரஞ் சேர்த்தும் கணக்கிட்டு அதில் 12 கழித்தே சேஷம் 9-6-6-8-11 ஆக வரில் சுசீவதி; 10-24-70-32 ஆக வரில் நசீவதியெனப்படும்.

### மாத தோஷ பரிகாரம்

சித்திரை மாதம் புருஷனுக்காகாது என்பதற்குப் பரிகாரம் புருஷனுக்கும் பெண்ஜாதிக்கும் ஒரு புதுப் புடவையுடுத்தி அவர்கள் சிரசின்மேல் 1000 துவாரஞ் செய்த மட்கலயத்தை வைத்துச் சலம் விட்டுப் பின்பு ஒரு மங்கிலிய ஸ்திரிக்கு அந்தப் புடவையைத் தானஞ் செய்யவும்.

ஆடிமாதம் பல புருஷரை யிச்சிப்பாளென்பதற்கு பரிகாரம்; பல கனிகளைத் தானங் கொடுக்கவும்.

ஐப்பசி மாதம் பிள்ளைகளுண்டாகி விதவையாவாளென்பதற்குப் பரிகாரம்: ஒரு மங்கிலிய ஸ்திரீக்கு

அப்பியங்களஞ் செய்வித்து ஒரு சிகப்புப் புடவை மங்கிலியம், மஞ்சள், குங்குமம், தாம்பூலம், சுயம்பாகம் தானங் கொடுக்கவும்.

வாரதோஷ பரிகாரம்

ஞாயிறு மிக்க வியாதியா யிருப்பாளென்பதற்குப் பரிகாரம்: கோதுமை தானங் கொடுக்கவும்.

செவ்வாய், இடுக்கணுண்டா யிருப்பாளென்பதற்கும் பரிகாரம்: ஒரு வீடுபோல் பந்தல் போடுவித்து அந்தப் பந்தலில் ருதுவான பெண்ணை படுக்கவைத்து மேற்படி பந்தல் வாசற்படியை அடைத்து ஒரு பக்கம் கொஞ்சம் கொளுத்தி, மேற்படி பெண்ணை வேறொரு வழியாக வெளியில் வரவழைத்து ஸ்நானம் செய்வித்து மறுபடியும் ஒரு மங்கிலிய ஸ்திரீயை அப்பியங்கனஞ் செய்வித்து அவளுக்கு ஒரு மங்கிலியம், ஒரு சிவப்புச் சேலை குங்குமம், மஞ்சள், தாம்பூலம், சுயம்பாகந் தானங் கொடுக்கவும்.

சனி விபத்தை அடைவாளென்பதற்குப் பரிகாரம்: ஒரு வெண்கலப் பாத்திரத்தில் நல்லெண்ணெய் வார்த்து, அதில் ருதுவான பெண்ணைத் தன் ரூபத்தைப் பார்வையிடச் செய்து, மறுபடியும் வேறொரு கலசத்தில் பால்விட்டுத் தானங் கொடுக்கவும்.

திதிதோஷ பரிகாரம்

பிரதமை பாவியா யிருப்பாளென்பதற்குப் பரிகாரம்: சிவாலயங்களில் அபிஷேகம், நைவேத்தியஞ் செய்வித்து எள்ளு தானங் கொடுக்கவும்.

சதுர்த்தி பல புருஷரை இச்சிப்பாளென்பதற்குப் பரிகாரம்: சிவாலயங்களுக்கு அகண்டங்களில் தாமரை நூல் போட்டு பசுநெய்விட்டுத் திருவிளக்கேற்றவும்.

சஷ்டி, சண்டைக்காரியாயிருப்பாள் என்பதற்குப் பரிகாரம்: கொஞ்சம் பொன்னினால் பசுவைப்போற் செய்து ஒரு பெரியவருக்கு தானங் கொடுக்கவும்.

அஷ்டமி, இராட்சசியா யிருப்பாளென்பதற்குப் பரிகாரம்: சிவாலயங்களில் நெய்விளக்கேற்றிவைத்து ருத்திராபிஷேகஞ் செய்யவும்.

துவாதசி, பலரையுந் தூஷிப்பாளென்பதற்குப் பரிகாரம்: சிவாலயங்களில் நெய்விளக்கேற்றி வைத்து உருத்திராபிஷேகஞ் செய்யவும்.

சதுர்த்தசி, பாபஞ்செய்கிறவளா யிருப்பாளென்கிறதற்குப் பரிகாரம், அரசமரத்தை நாள் 1-க்கு எட்டு தரம் பிரதக்ஷணமாக 3 நாள் செய்து மூன்றுபேர்களுக்கு அன்னங் கொடுக்கவும்.

பௌர்ணமி, அசல் வீடு திரிவாளென்பதற்குப் பரிகாரம்: தட்சணை தாம்பூலத்தோடு ஒரு கலியாண பூசனிக்காய் தானங் கொடுக்கவும்.

அமாவாசை, தரித்திரமாயிருப்பா ளென்பதற்குப் பரிகாரம்: ஒரு வெண்கலப் பாத்திரத்தில் நல்லெண்ணெய் வார்த்து அதில் ருதுவான பெண்ணை தன்ருபத்தைப் பார்வையிடச் செய்து அதை தானங் கொடுக்கவும்.

நக்ஷத்திர தோஷ பரிகாரம்

பரணி, அசல் வீடு வாழப் பெற்றுக்காளென்கிறதற்குப் பரிகாரம்: வன்னி சமித்து ஓமம் வளர்த்தி, அதற்கு 27 பிரதக்ஷணம் வரவேணும்.

கிருத்திகை, மிக தரித்திரமா யிருப்பாளென்கிறதற்குப் பரிகாரம்: சிவசுப்பிரமணியருடைய ஆலயங்களில் 27 மாவிளக்கில் பசுநெய்விட்டு விளக்கேற்றி அவைகளுக்கு 127 பிரதக்ஷணஞ்செய்து உபவாசமிருந்து 27 பேர்களுக்கு அன்னம் படைக்கவும்.

திருவாதிரை, நிற்பாக்கியமா யிருப்பாளென்கிறதற்குப் பரிகாரம்: பெண்சாதி பிள்ளைகளுடைய ஒரு பெரியவரை அப்பியங்கனஞ் செய்துவித்து வஸ்திரம், சந்தனம், குங்குமம், முஞ்சள், புஷ்பம், அக்ஷதை, தாம்பூலம் தக்ஷிணை கொடுத்துப் பிரதக்ஷணஞ் செய்து அனுப்பவும்.

புனர்பூசம், பதிவிரதை போலிருப்பாளென்கிறதற்குப் பரிகாரம்: பண்டு பலகாரந் தானங்கொடுக்கவும்

ஆயிலியம், கபடியா யிருப்பாளென்கிறதற்குப் பரிகாரம்: கந்தமூலாதிகளைச் சிறுபிள்ளைகளுக்கு தானங் கொடுக்கவும்; மேலும் சிவாலயங்களில் தீபாராதனை செய்விக்கவும்.

மகம், புத்திர நாசமடைவா ளென்பதற்குப் பரிகாரம்: கிராம தேவதைகளுக்குப் பொங்கல் வைத்து மாவிளக்கிடவும்.

பூரம், கர்ப்ப நஷ்டமடைவா ளென்பதற்குப் பரிகாரம்: தங்கள் குலதெய்வத்துக்கும் பூவாடைகாரிக்கும் பூசை நைவேத்தியஞ் செய்யவும்.

பிழை

அஸ்தம், பந்துக்களை இரட்சிப்பாள்.

திருத்தம்

அஸ்தம், எள்ளளவுமாகாது என்கிறதற்குச் சாந்தம்: தர்ப்பையால் ஒரு பிரதமை செய்து ஏழாம் நாளில் தகனஞ்செய்து, அச்சாம்பலில் நித்தியம் ஒரு வேளை நெற்றியிலிட்டு 108 வில்வ பத்திரம், 108 வெண்சாமரை புஷ்பம் சிவாலயங்களில் அர்ச்சனை செய்து, நவசக்கிர பூசை சாந்தி செய்து அன்னதானம் செய்யவும்-

பிழை

சித்திரை, பதிவிரதையாயிருப்பவள்-

திருத்தம்

சித்திரை, வாழ்வு குன்றிப்போம் என்கிறதற்குச் சாந்தம்: சிவாலயங்களிலாவது விஷ்ணுவாலயங்களிலாவது 1000 செந்தாமரை, வெண்தாமரை, 108 சிவந்தாழம்பூ இவைகளை மந்திர விதியுடனே அபிஷேகம், நைவேதனம் அர்ச்சனை செய்வித்து, நெல்லிமரத்தின் கீழ் சமாராதனை செய்யவேண்டியது.

விசாகம், அழுக்கடைந்திருப்பா ளென்கிறதற்குச் சாந்தம்: சில்லியிருக்கின்ற க்ரகத்தில் ஜலம்விட்டுப் புருஷனும் பெண்ஜாதியும் ஒரு சேலை கட்டிக்கொண்டதைத் தானம் பண்ணவும்.

கேட்டை, சிறையிருப்பா ளென்கிறதற்கு சாந்தம்: ஒரு அரச மரத்தை 108 பிரதக்ஷணம் வந்து ஓமம் வளர்த்தித் தங்கள் குலதெய்வத்துக்குப் பூசை செய்யவும்.

பூராடம், விசனமாயிருப்பா ளென்கிறதற்குச் சாந்தம்: தாமரை நூல் திரிபோட்டு நெய்விட்டுச் சிவாலயங்களில் எண்ணிறந்த விளக்குகள் வைத்து அபிஷேகம் நைவேதனம் அர்ச்சனை செய்வித்து, கலியாண பூசினிக்காயுள் பிரதமை சொருகித் தானங் கொடுக்கவும்.

பூரட்டாதி, நோய் புருடனுண்டாயிருப்பாளென் கிறதற்குச் சாந்தம்: பாணக்கம் தாம்பூலம் தானஞ் செய்யவும்.

யோக தோஷ பரிகாரம்

விஷ்கம்பம், வினையுண்டா யிருப்பாளென்கிறதற்குச் சாந்தம்; சந்தனம் புஷ்பம் பெரியோர்களுக்குக் கொடுக்கவும்.

அதிகண்டம், பாவியாயிருப்பா ளென்கிறதற்குச் சாந்தம்: மங்கிலிய ஸ்திரீக்குக் கதம்பப்பொடி மஞ்சள் குங்குமம் காதோலை கருமணி சுயம்பாகம் தாம்பூலமுங் கொடுக்கவும்.

சூலம், துர்மரணமாவா ளென்பதற்குச் சாந்தம்: சிவாலயங்களுக்குக் கற்பூர தீபாராதனை செய்யவும்.

கண்டம், பாவியாயிருப்பா ளென்கிறதற்குச் சாந்தம்: ஒரு மங்கிலிய ஸ்திரீக்கும் அவளுடைய புருஷனுக்கும் புஷ்பம், சந்தனம், கதம்பப்பொடி, மஞ்சள், குங்குமம், காதோலை மங்கிலியம். சேலை, சோமன், சுயம்பாகம், தாம்பூலம், தட்சிணை தானங் கொடுக்கவும்.

வியாகதம், விதவையாவா ளென்கிறதற்குச் சாந்தம்: வெண்கலப் பாத்திரந் தானங்கொடுக்கவும்.

விதிபாசம், கொடிய விசனமாயிருப்பா ளென்கிற தற்குச் சாந்தம்: ஒரு மங்கிலிய ஸ்திரீக்கு மங்கிலியம், மஞ்சள், சந்தனம், புஷ்பம், சுயம்பாகந் தானங்கொடுக்கவும்.

பரீதம், உறவுக்குப் பகையா யிருப்பாளென்பதற்குச் சாந்தம்: சிவாலயத்தைப் பிரதட்சணஞ் செய்து ஈஸ்வரிக்குக் களப கஸ்தூரிகள் தரித்து செப்ஞ் செய்யவும் அல்லது அபிஷேக நிவேதனஞ் செய்யவும்.

பிரமம், பாவியாயிருப்பா ளென்கிறதற்குச் சாந்தம் பழங்கள் தானங் கொடுக்கவும்.

பிழை

மகேந்திரம் வியாதியால் மரணமாவாள்

திருத்தம்

மகேந்திரம் இந்திரபோகமாயிருப்பாள்.

வைகிருதி, உயிர்வதை செய்வாள் என்கிறதற்குச் சாந்தம்: சிவாலயங்களுக்கபிஷேக நிவேதனஞ் செய்க.

கரண தோஷ பரிகாரம்

கரசை, விதவையாவா ளென்கிறதற்குச் சாந்தம் மங்கிலியப் பெண்களுக்குப் புஷ்பம், சந்தனம் தாம்பூலம் அன்னங் கொடுக்கவும்

சகுனி: நடவா நடக்கை நடவாளென்கிறதற்குச் சாந்தம்: ஓமம் வளர்த்தி அதை 20 பிரதட்சணஞ் செய்து வந்து தானங் கொடுக்கவேண்டியது.

சதுஷ்ரதம், சந்தோஷமில்லாதவ ளென்கிறதற்குச் சாந்தம்: அன்னங் கொடுக்கவேண்டியது.

இலக்கின தோஷ பரிகாரம்

மேஷம், தரித்திரயா யிருப்பாளென்கிறதற்குச் சாந்தம்: வீட்டுத் தேவைகளுக்கு வெண்டாமரைப்பூ தரிக்கவேண்டியது.

இடபம், சொற்ப புத்திரருண்டா இருப்பாளென்பதற்குப் பரிகாரம்: கன்னிகழியா பெண்களுக்குப் பழங்கள் கொடுக்க வேண்டியது.

சிங்கம், புருடனை நீக்கியிருப்பா ளென்கிறதற்குச் சா ந்தம்: சிவாலயங்களுக்குத் தாமரை நூலிட்டு 105 விளக்கு வைத்து நாகப் பிரதிஷ்டை செய்து அதைப் பிரதக்ஷணஞ் செய்யவேண்டியது

விருச்சிகம், விபசாரியா யிருப்பாளென்பதற்குச் சாந்தம்: சிவாலயங்களுக்குத் தாமரை நூல் போட்டு பசுவின் நெய்விட்டு 100 விளக்கேற்றி நாகப் பிரதிஷ்டை செய்து அரச மரத்தை 100 பிரதக்ஷணம் வந்து அன்னதானஞ் செய்யவேண்டியது.

தனுசு, உத்தமம் மத்திபமானவளா யிருப்பாள் என்கிறதற்குச் சாந்தம்: தனுசு நாழிகை 5 அது முதற் பாதியாஞல் தர்ப்பாசனம் போட்டு 9 நாள் படுத்திருந்து 10-வது நாளில் சிலருக்கு அன்னங் கொடுக்க வேண்டியது.

மகரம், மானமில்லாதவளா யிருப்பாளென்கிறதற்குச் சாந்தம்: ஒரு சிவாலயத்துக்கு நெய் விளக்கேற்றி அபிஷேக நைவேதனஞ் செய்யவேண்டியது,

ஏழாமிட தோஷ பரிகாரம்

சூரியன், விதவையாவா ளென்கிறதற்கு சாந்தம்: ஒரு மங்கிலிய ஸ்திரீக்கு ஒரு மங்கிலியம், தாம்பூலம் கொடுக்க வேண்டியது.

சந்திரன், குழந்தைகளை யிழப்பாளென்கிறதற்குச் சாந்தம்: சிறு பிள்ளைகளுக்குப் பால்சோறு பழங்களும் கொடுக்கவேண்டியது.

செவ்வாய், வேசையாவா ளென்கிறதற்குச் சாந்தம்; சங்கிரமசாதிக்கு சிவப்பு அன்னம் சிவப்புபதார்த்தம் சிவப்பு புஷ்பம் கொடுக்க வேண்டியது.

புதன், மலடியாவா ளென்கிறதற்குச் சாந்தம்: சிவாலயத்துக்கு முச்சித் தொட்டில் பிள்ளை செலுத்தி, செபம் செய்யவேண்டியது.

குரு, பாக்கியமில்லாதவளா யிருப்பாளென்கிறதற்குச் சாந்தம்; செவ்வந்தி புஷ்பத்தை பத்தி மாலை கட்டி ஒரு தேவதைக்குத் தரிக்கவேண்டியது.

சுக்கிரன், வீடுவிட்டுப் போவாளென்கிறதற்குச் சாந்தம்: ஓமசாந்தி செய்யவேண்டியது.

சனி, வியாதியா யிருப்பாளென்கிறதற்கு சாந்தம்: சிவாலயங்களுக்கு அபிஷேகஞ் செய்வித்துக் குருவுக்குச் சமானமாயிருக்கிற ஒரு பெரியவருக் கன்னங் கொடுக்கவேண்டியது.

இராகு, புருஷனை இழப்பாளென்கிறதற்குச் சாந்தம்: ஓமசாந்தி செய்யவேண்டியது.

கேது, உறவுக்குப் பகையாயிருப்பாளென்கிறதற்குச் சாந்தம்: நவதானியங் கொடுக்கவேண்டியது.

### நக்ஷத்திர பலன்

### கலி விருத்தம்

உத்திராடமாதியாக ஆறுமாறுமுத்தமம்
பித்தனுர்பிறந்தநாளும் பின்னையாறுமத்திபம்
அத்தமோடுசித்திரை யமைந்தவாழ்வு குன்றிடும்
மற்றோராறுநாள்கடமின் மங்கைநூலிழப்பாளே.

### நாழிகை தோஷ பரிகாரம்

30-நாழிகையுளானுல் அதமம் என்கிறதற்குச் சாந்தம்: கனிவர்க்கந் தானங்கொடுக்கவேண்டியது.

### காலதோஷ பரிகாரம்

முற்பகலிலானால் தீர்த்த யாத்திரை
பிற்பகலிலானால்-சோரத்துவம்
அஸ்தமனத்திலானால்-சோரத்வம்
நடுராத்திரியானால்-விதவையாவாள்
பின்ராத்திரியானால்-சுகமில்லாதவள்
சந்திகளிலானால்-பாக்கியமற்றவள்

என்பவைகளுக்குப் பரிகாரம்: குடை தானங் கொடுக்கவேண்டியது. சிவாலயத்தில் திருவிளக்குகள் ப்ரவவைத்து அவைகளைப் பிரதக்ஷணஞ் செய்யவேண்டியது.

### ஜாமஸ்தான தோஷ பரிகாரம்

3-வது ஜாமம், சாய்ந்த கொங்கையுண்டு என்கிறதற்குச் சாந்தம்: பச்சைப் பாக்குக் குலைகள் நல்ல நல்ல பெரியோர்களுக்குத் தானங் கொடுக்கவேண்டியது.

4-வது ஜாமம், சரிந்த கொங்கையாயிருப்பாளென்கிறதற்குச் சாந்தம்: இளநீர்க்காய் குலைகள் நல்ல பெரியோர்களுக்குத் தானங் கொடுக்கவேண்டியது.

### ஜாமதோஷ பரிகாரம்

3-வது ஜாமம், பலரையும் வேண்டுவாள் என்கிறதற்குச் சாந்தம்: விசிறி, பானக்கம், பாக்கு, வெற்றிலை தானங் கொடுக்கவேண்டியது.

### வஸ்திர தோஷ பரிகாரம்

பச்சை சேலையானால் தரித்திரமென்பதற்குச் சாந்தம்: மேற்படி சேலையை யாருக்காவது கொடுத்துவிடவேண்டியது.

சிவப்பு சேலையானல் வியர்தி என்பதற்குப் பரிகாரம் கலவைச் சந்தனம் ஆலயங்களில் அபிஷேகஞ் செய்யவேண்டியது.

கருப்புச் சேலையானல் விபசாரமென்பதற்குச் சாந்தம்: மேற்படி ருதுவான ஸ்திரீயும், அவள் புருஷனும் வேருரு கருப்புசசேலையுடுத்திக்கொண்டு ஒரு புண்ணிய நதியிலே ஸ்நானஞ் செய்து ஷை சேலையை ஒரு மங்கிலிய ஸ்திரீக்குத் தானங் கொடுக்கவேண்டியது.

பஞ்சவர்ணச் சேலையானல் தரித்திரமென்கிறதற்குச் சாந்தம்: சிவாலயங்களுக்குச் ஷோடச உபசாரத்தோடு மகாபிஷேகமும் நைவேதனமுஞ் செய்து அந்த சேலையை யாருக்காவது கொடுக்கவேண்டியது.

புத்திராள் தொகை தோஷ பரிகாரம்

இரட்டையானல் ரோகமுண்டு என்பதற்குப் பரிகாரம்: கோரோசனை கலந்த சந்தனம் தானம் கொடுக்கவேண்டியது.

சூரியனிருக்கிற நட்சத்திர முதல் ருதுவான நட்சத்திரம் வரையில் எண்ணி அதை 84 நட்சத்திரமாக 6 இடத்திற்குப் பங்கிடுவதில் ருதுவான நட்சத்திரம் எந்தத் திக்கில் வருகிறதோ, அந்தத் திக்கில் யலாபலனறியவேண்டியது.

கிழக்கில்-3-தனவாதியா யிருப்பாள்
தென்கிழக்கில் 1-இல்லாளிறப்பாள்
தெற்கில்-3-புருடன் பிரிந்துபோவான்
தென்மேற்கில்-3-புத்திரர்வர்த்தினியாவாள்
மேற்கில்-விதவையாவாள்

வடக்கில் 3-தனபாக்கியமுண்டாயிருப்பாள்.
பிரமஸ்தானம்-இழிவான குலஞ்சேர்வாள்

சகலருக்குஞ் சுகமுண்டாகுக.
ருது நூல் முற்றிற்று.

---

# வருஷங்கள் 60

பிரபவ
விபவ
சுக்கில
பிரமோதூத
பிரசோற்பத்தி
ஆங்கீரச
ஸ்ரீமுக
பவ
யுவ
தாது
ஈஸ்வர
வெகுதானிய
பிரமாதி
விக்ரம
விஷு
சித்திரபானு
சுபானு
தாரண
பார்த்திப
விய
சர்வசித்து
சர்வதாரி
விரோதி
விக்ருதி
கர
நந்தன
விஜய
ஜய
மன்மத
துன்முகி
ஹேவிளம்பி
விளம்பி
விகாரி
சார்வரி
பிலவ
சுபகிருது
சோபகிருது
குரோதி
விசுவாவசு
பராபவ
பிலவங்க
கீலக
சௌமிய
சாதாரண
விரோதிகிருது
பரிதாபி
பிரமாதீச
ஆனந்த
இராக்ஷஸ
நள
பிங்கள
காளயுக்தி
சித்கார்த்திரி
ரௌத்திரி
துன்மதி
துந்துபி
ருத்ரோத்காரி
ரக்தாட்சி
குரோதன
அட்சய

---

வாகீஸ்வரி அச்சகம், சென்னை-1, (1974)

# மாயாஜால மர்மங்கள்

[நான்கு பாகங்கள் அடங்கியது]

## விலை ரூபா. 4-50.

இந்நூலில் வேண்டிய அதர்வண வித்தைகளும், மோடி வித்தைகளின் இரகசியங்களும், மற்றும் யாவரும் பிரமிக்கத் தக்க பல ஜாலங்கள், பல சித்தர்கள் விளையாடும் மை வகைகளும், அஞ்சன மைகளும், சிம்பி வித்தை, சொக்குப்பொடிகள் சூஷி, அஷ்டகர்ம கரு மை, மற்றும் முனிவர்கள், வாராகி, ஜாலக்காரன், குட்டிச்சாத்தான், யக்ஷணி, அநுமான், மாடன், பகவதி, இருளிகாட்டேரி வசியங்களும், அதற்கு வேண்டிய மந்திரங்களும் மற்றும் கோகர்ண கஜகர்ண இந்திர மகேந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதிபிடித்தல், வேப்பிலை அடித்தல், பேய்பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சதிபதிகள் பிரியா திருத்தல், ஈமெருக்கை முறித்தல், மற்றும் பாம்பு, தேள், நாய், பூனை, எலி இது போன்ற பல விஷஜெந்துக்களின் கடி விஷங்களை ஒழித்தல், இன்னும் ஜாலக்காரரின் ஜெகஜால வித்தைகள், முள்ளின்மீது படுத்தல், நெருப்பை கையிலள்ளுதல், நெருப்பு மிதித்தல், நெருப்புசட்டி ஏந்தும் சூக்ஷும், நெருப்பை மடியில் கட்டுதல், ஜலத்தின்மீது படுத்தல் ஜலத்திருட்காருதல், வயிற்றில் ஈட்டிபாய்ச்சுதல், மோடியின் மும்முரமான வித்தைகள், வனவிலங்குகளை அடக்கி ஆளுதல், உடுக்கையை உடைத்தல், கன்றுகுட்டியின் தலை கத்துதல், உள்ளுயிர பிருத்தல், ஆட்டுமண்டையை மாட்டுமண்டை யாக்குதல், அந்தரமாக நிற்குதல், குளத்திலுள் சென்று விதம் எழுதுதல், பந்தயம் ஜெயித்தல், பாணுகொம்பு பாட்டு பாடுதல், இதுபோன்ற எண்ணிலடங்காத ஏராளமான ஜால வித்தைகள் இதில் அடங்கியுள்ளது.

எமது விலாசம் :— ஆர். ஜி. பதி கம்பெனி,

4, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1.